Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019

வினாத்தாள் இல. 8

# வினாத்தாள் I

2019.06.20 / 09:30 - 10:15

45 நிமிடம்

சுட்டெண் :......................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும்** உரிய விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** தருக.
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| பிரதான பரீட்சகர்<br>மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |


Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




- **1, 2** ஆகிய வினாக்களில் மிகவும் நெருங்கிய தொடர்பு உள்ள உருச் சோடிக்குரிய அடைப்பைத் தெரிவுசெய்க.


**1.**



(1)




(2)




(3)


**2.**



(1)




(2)





(3)

- **3, 4** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவுசெய்க.


**3.**








(1)





(2)




(3)


**4.**








(1)



(2)



(3)

- பின்வரும் கவிதையைக் கொண்டு **5, 6** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

பள்ளி செல்லும் பிள்ளையே சாலை விதிகளை மனதில் வைத்துக்கொள்
நடக்கும் பாதை வழியே நீயும் நடந்து கவனமாய் வீதியைக் கடக்கணும்
சிரித்துப் பேசி சேர்ந்து நால்வர் சாலையை மறித்துச் செல்லலாகாது
வீதி விதிகள் பேணி நிதம் விபத்துக்கள் தவிர்த்து மகிழ்வோமே!

**5.** நாம் வீதியில் எதைச் செய்யக் கூடாது ?

(1) நடக்கும் பாதை வழியே நடத்தல்
(2) சாலையை மறித்துச் செல்லல்
(3) கவனமாய் வீதியைக் கடத்தல்

**6.** இக்கவிதை பிரதானமாக எமக்குக் கூறுவது

(1) பிள்ளைகள் காலையில் பாடசாலைக்கு நடந்து செல்வது பற்றி
(2) நடை பாதை வழியே நடந்து கவனமாக வீதியைக் கடப்பது பற்றி
(3) வீதி விதிகளை அனுசரித்து நடக்க வேண்டியதன் அவசியம் பற்றி

Downloaded from:-www.paritchai.com


[பக். 3 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com





சுட்டெண் :..................................................


● **7, 8** ஆகிய வினாக்களில் வெறுமையாகவுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.


**7.** 



(1)



(2)


(3)

**8.** 


(1)


(2)


(3)


**9.** பெட்டியொன்றிலே பால்மா பக்கெற்று 12 அல்லது சீனிப் பக்கெற்று 16ஐ மட்டுமே வைப்பதற்கு இடவசதி உள்ளது. அந்தப் பெட்டியிலே 4 சீனிப் பக்கெற்றுக்களுடன் எத்தனை பால்மா பக்கெற்றுகளை வைக்க முடியும் ?

(1) 3 (2) 6 (3) 9

**10.** X, S, N, M. O, Z ஆகிய எழுத்துக்களை முகம்பார்க்கும் கண்ணாடியின் எதிரே பிடித்துப் பார்த்தால் எழுதிய விதமே தெரிகின்ற எழுத்துக்கள் அடங்கிய விடையைத் தெரிவுசெய்க.


(1) X, S, M (2) X, N, O (3) X, O, M


**11.** பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.





(1) 28 (2) 30 (3) 34

**12.** சிறுவன் ஒருவன் ஒரு பூப்பாத்தியை அமைப்பதற்கு ஓர் இடத்திலிருந்து வடக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி 3 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து தெற்கு நோக்கி 6 மீற்றருக்கும் அவ்விடத்திலிருந்து தொடக்கத் தானத்திற்கும் ஒரு கயிற்றை இழுத்துத் தரையில் அடையாளமிட்டான். அப்பூப்பாத்தியின் வடிவத்தைத் தெரிவுசெய்க.


(1)


(2)


(3)

**13.** தினமும் தவறாமல் ரூபாய் 5ஐ உண்டியலில் இட்டு சேகரிக்கும் கமலா ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களிலும் உண்டியலில் சேகரித்த பணம் எவ்வளவு ?

(1) ரூபாய் 445 (2) ரூபாய் 450 (3) ரூபாய் 460




Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**14.** உருக்களில் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு தாளை இரண்டாக மடித்து மறுபடியும் இரண்டாக மடித்து எல்லாக் கடதாசிப் பகுதிகளும் அடங்குமாறு உரு B இல் உள்ளவாறு துளைகளை இட்டு முற்றாக விரிக்கும்போது கிடைக்காத உரு யாது ?



உரு A　　உரு B　　(1)　　(2)　　(3)

**15.** வட்ட வடிவமான மைதானம் ஒன்றைச் சுற்றி 8 கம்பங்கள் சம இடைவெளியில் நடப்பட்டு இருந்தன. இரண்டு கம்பங்களுக்கு இடையே 4 கொடிகள் வீதம் கட்டப்பட்டிருந்தன எனின், அங்கு கட்டப்பட்டிருந்த கொடிகளின் மொத்த எண்ணிக்கை யாது ?

(1) 28　　(2) 32　　(3) 36

**16.** கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசிக்க.


காடு விலங்குகளின் இராஜதானி ஆகும். மனிதர்கள் காட்டு விலங்குகளை △1 விரும்புவர். மனிதர்களுக்கு அவ்வாய்ப்பை வழங்கும் நோக்குடன் காட்டில் இருந்து பிடிக்கப்பட்ட விலங்குகளைக் கூடுகளில் அடைத்து காட்சிப்படுத்தும் முறை ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் உலகில் △2 பற்றிய எண்ணக்கரு உருவாகியது. பந்தியில் △1, △2 ஆகிய இடங்களுக்கு மிகவும் பொருத்தமான சொற்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) பார்ப்பதற்கு, பூங்காவனம்
(2) பிடிப்பதற்கு, மிருகக்காட்சிச்சாலை
(3) இரசிப்பதற்கு, மிருகக்காட்சிச்சாலை

**17.** அணிவகுப்பு வரிசை ஒன்றில் இந்திரா இடது பக்கத்திலிருந்து 7ஆவது ஆகவும் சந்திரா வலது பக்கத்திலிருந்து 5ஆவது ஆகவும் நின்றனர். அவ்வரிசையில் மொத்தம் 19 பேர் உள்ளனர் எனின், இந்திராவுக்கும் சந்திராவுக்கும் இடையே எத்தனை பேர் உள்ளனர் ?

(1) 6　　(2) 7　　(3) 8

**18.** பின்வரும் உருவில் உள்ள கோலத்திற்கு ஏற்ப A, B ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய எண்கள் முறையே யாவை ?




(1) 6, 12
(2) 8, 17
(3) 9, 20

**19.** ஒரு கண்காட்சியில் மூன்று வெவ்வேறு நிறமுள்ள மின்குமிழ்கள் முறையே ஒவ்வொரு 5, 10, 15 நிமிடங்களுக்கும் ஒளிர்கின்றன. அவை எல்லாம் ஒருமிக்க மு.ப. 7.00 இற்கு ஒளிர்ந்தால், அவை மீண்டும் ஒருமிக்க ஒளிரும் இரண்டு சந்தர்ப்பங்கள் எவை ?

(1) மு.ப. 7.15 உம் மு.ப. 7.30 உம்
(2) மு.ப. 7.20 உம் மு.பு. 7.40 உம்
(3) மு.ப. 7.30 உம் மு.ப. 8.00 உம்

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



● A, B, C என்னும் மூன்று மரங்களில் உள்ள பறவைகளின் எண்ணிக்கையைக் கொண்டு **20, 21** ஆகிய வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவுசெய்க.

- ✼ மரம் C இல் இருக்கும் எண்ணிக்கையிலும் பார்க்க இரு மடங்கு பறவைகள் மரம் B இல் இருக்கின்றன.
- ✼ B, C ஆகிய இரு மரங்களிலும் உள்ள பறவைகளின் மொத்த எண்ணிக்கை மரம் A இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கைக்குச் சமம்.
- ✼ மரம் B இலிருந்து ஒரு பறவை மரம் C இற்குப் பறந்து செல்லும்போது மரம் B இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை 3 ஆகும்.


**20.** மரம் B இல் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது ?


(1) 2 (2) 3 (3) 4


**21.** மூன்று மரங்களிலும் உள்ள பறவைகளின் எண்ணிக்கை யாது ?


(1) 6 (2) 10 (3) 12

**22.** பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும்போது தோற்றும் விதம் யாது ?






(1)



(2)


(3)

**23.** தரப்பட்டுள்ள மூன்று உருக்களில் ஓர் உரு மற்றைய இரு உருக்களிலிருந்தும் வேறுபட்டது. அவ்வேறுபட்ட உருவைத் தெரிவுசெய்க.


(1)



(2)



(3)


**24.** "இருபதாயிரத்து ஐநூற்று முப்பத்தொன்று" என்னும் எண்ணில் உள்ள இலக்கங்களைப் பின்னாலிருந்து முன்னால் எழுதும்போது கிடைக்கும் எண் யாது ?

(1) 53 120 (2) 13 502 (3) 31 502

**25.** கீழே தரப்பட்டுள்ள எவ் உருவைப் புள்ளிக் கோடுகளின் வழியே மடிப்பதன் மூலம் ஒரு கனவுருவை ஆக்கலாம் ?


(1)


(2)


(3)


[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**26.** ஒரு குறித்த கோலத்திற்கேற்ப குற்றுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விதம் கீழே உள்ளது.




இக்கோலத்திற்கேற்ப அடுத்த ஒழுங்கில் வர வேண்டிய குற்றுகளின் எண்ணிக்கை எத்தனை ?

(1) 15 (2) 21 (3) 28

**27.** நபர் ஒருவர் A என்னும் இடத்திலிருந்து கிழக்குத் திசை நோக்கி 100 மீற்றர் பயணஞ் செய்து இடப்பக்கம் திரும்பி 50 மீற்றர் பயணம் செய்கிறார். பின்னர் அங்கிருந்து மீண்டும் இடப்பக்கம் திரும்பி 100 மீற்றர் பயணஞ் செய்து B என்னும் இடத்தை அடைகிறார். அவர் பயணத்தை ஆரம்பித்த இடத்தை அடைவதற்கு இடப்பக்கம் திரும்பி மேலும் எத்தனை மீற்றர் செல்ல வேண்டும் ?

(1) 50 (2) 100 (3) 250


**28.** இவ்வுருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது ?



(1) 8 (2) 10 (3) 12

● **29, 30** ஆகிய வினாக்களில் ஒரு குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்ட ஐந்து படங்கள் தரப்பட்டுள்ளன. அச்சம்பவங்கள் நடைபெறும் ஒழுங்கிற்கு ஏற்ப படங்கள் இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.


**29.**



A B C D E

(1) A E B C D (2) B A C E D (3) C D A E B

**30.**



A B C D E

(1) A B C E D (2) A D E B C (3) A C B D E

**31.** 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 25ஆம் திகதி என்ன நாளாகும் ?

(1) வெள்ளிக்கிழமை (2) சனிக்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**32.** வாகனத் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கார்களினதும் முச்சக்கரவண்டிகளினதும் மொத்த எண்ணிக்கை 13 ஆகும். அவற்றின் சில்லுகளின் மொத்த எண்ணிக்கை 45 ஆகும். வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகளின் எண்ணிக்கையும் கார்களின் எண்ணிக்கையும் யாவை ?

(1) முச்சக்கரவண்டிகள் 5, கார்கள் 8
(2) முச்சக்கரவண்டிகள் 6, கார்கள் 7
(3) முச்சக்கரவண்டிகள் 7, கார்கள் 6

**33.** △ + △ + △ = 12
□ − 3 = △
□ + △ = ✚ எனின். △ + ✚ − □ இன் பெறுமானம் யாது ?


(1) 7 (2) 8 (3) 10

**34.** ■ ● ■
▲ ● என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி பம்பரம் என்னும் சொல் எழுதப்பட்டுள்ளது.

அதற்கு ஏற்ப ▲ ● ■ ● என்னும் குறியீட்டினால் காட்டப்படும் சொல் யாது ?

(1) ரம்பம் (2) தம்பம் (3) கம்பம்

**35.** உருவில் உள்ள பொருள்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.



(1) விளையாடுதல், ஏறுதல் வெட்டுதல்
(2) அடித்தல். வெட்டுதல். அமர்தல்
(3) விளையாடுதல். அமர்தல். வெட்டுதல்

**36.** ஒரு பாடசாலையில் தரம் 1 மாணவர்களுக்குத் தினமும் பால் வழங்கப்பட்டது. தரம் 1 இல் 42 மாணவர்கள் உள்ளனர். ஒரு பிள்ளைக்கு ஒரு நாளைக்கு 100 *ml* வீதம் பால் வழங்குமாறு விநியோகத்தரிடம் அறிவுறுத்தப்பட்டது. தரப்பட்ட பாற்கையிருப்பு 42 பிள்ளைகளுக்குப் போதுமானது. ஆனால் தவறுதலாக ஒவ்வொரு பிள்ளைக்கும் 120 *ml* பால் வழங்கப்பட்டது. இதனால் பிள்ளைகள் சிலருக்குப் பால் கிடைக்கவில்லை. பால் கிடைக்காத பிள்ளைகளின் எண்ணிக்கை யாது ?

(1) 5 (2) 6 (3) 7

**37.** 10 cm நீளமும் 4 cm அகலமும் உடைய ஒரு செவ்வகத் தாளிலிருந்து நீளம். அகலம் 2 cm வீதம் உள்ள எத்தனை சிறிய சதுரத் தாள்களை வெட்டலாம் ?

(1) 10 (2) 12 (3) 15

**38.** ஒருவர் ஒரு வாரத்தில் அலுவலகமொன்றில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 5.00 வரைக்கும் கடமையாற்றுகிறார். மதியம் 1 மணித்தியாலம் உணவிற்காக ஓய்வு பெறுகிறார். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளெனில் அவர் வாரத்தில் எத்தனை மணித்தியாலங்கள் வேலை செய்கின்றார் ?

(1) 42 (2) 48 (3) 56

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



- பின்வரும் விவரத்தைப் பயன்படுத்தி **39, 40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

எனது பெயர் முரளி. நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்துத் தரிப்பிடத்தில் சிறிய தாயாரும் சிறிய தந்தையாரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் கீதா வகுப்பு முடிவடைந்து வரும்வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை. அந்நேரத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அலுவலக வேலை முடிவடைந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்து இருந்தனர். தங்கை கீதா அப்பேருந்திலிருந்து இறங்கி வந்தார்.

**39.** பின்வரும் கூற்றுகளிடையே சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) முரளி தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.

(2) கீதா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.

(3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.

**40.** பின்வரும் கூற்றுகளிடையே பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) முரளியின் தந்தை கீதாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.

(2) கீதாவின் தாயார் முரளியின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

(3) கீதாவின் தாயார் முரளியின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.

❊ ❊ ❊

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
[முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019**

வினாத்தாள் இல. 8

# வினாத்தாள் II

2019.06.20 / 10:45 - 12:00

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :.............................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**1.** பின்வரும் பந்தியை வாசிக்க.

நாட்டார் பாடல்கள் மிகவும் எளிமையானவை. உள்ளதை உள்ளபடியே சொல்லுபவை. உள்ளத்தை ஈர்க்கும் இனிமை மிக்கவை. இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடாத்தும் கிராமிய மக்களின் உணர்ச்சிகளை அப்படியே வெளிப்படுத்துபவை. நாட்டார் பாடல்கள் படிப்பறியாத பாமர மக்களுக்கும் சிற்றூர்களில் வாழ்ந்து கொண்டு கூட்டாகத் தொழில் செய்து பிழைக்கின்ற ஏழை மக்களுக்கும் இன்பம் தருபவையாகும். இப்பாடல்கள் கிராமத்து மக்களது கூட்டு வாழ்க்கையை எடுத்துக்காட்ட உதவுபவை. குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும்போதும் விழாக்கள் கொண்டாடும்போதும் களியாட்டங்களின்போதும் நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் பாடப்படுகின்றன.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) நாட்டார் பாடல்களின் ஓர் இயல்பை எழுதுக. :..................................................

(ii) நாட்டார் பாடல்கள் பாடப்படும் **இரண்டு** சந்தர்ப்பங்களை எழுதுக.

(1) :..................................................

(2) :..................................................

(iii) 'மதுரம்' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

:..................................................

(iv) 'சிற்றூர்' என்பதைப் பிரித்தெழுதுக. :...................... + ...................

(v) பாடல் என்ற சொல்லின் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. :..................................................

**2.** பின்வரும் ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை எழுதுக.

(i) உப்பிட்டவரை உள்ளளவும் நினை. :..................................................

(ii) காகந் திட்டி மாடு சாகாது. :..................................................

**3.** வெற்றிடத்துக்குப் பொருத்தமான **சரியான சொல்லைத்** தெரிவுசெய்க.

(i) வேடன் எய்த .......................... (பானம் / பாணம்) பட்டு மான் கீழே விழுந்தது.

(ii) .......................... (உளவு / உழவு) பார்த்தவன் நகரக் காவலரால் பிடிக்கப்பட்டான்.

**4.** பின்வரும் சொற்றொடர்களுக்குரிய **தனிச்சொல்லை** எழுதுக.

(i) விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது :..................................................

(ii) நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் :..................................................

**5.** பின்வரும் கூற்று சரியெனின் (✓) எனவும் **பிழையெனின்** (✗) எனவும் அடையாளம் இடுக.

(i) 'நண்பர்கள்' என்பது உயர்திணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.........)

(ii) 'புத்தகம்' என்பது அஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். (.........)

**6.** பின்வரும் ஆண்பால் வாக்கியங்களைப் **பெண்பால்** வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

(i) எனது தம்பி பாட்டுப் பாடினான்.

:..................................................

(ii) விடுமுறைக்கு மாமா வீட்டிற்குச் செல்வேன்.

:..................................................

Downloaded from:-www.paritchai.com

[பக். 3 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :..............................................

7. பின்வரும் சொல்லை சேர்த்தெழுதுக.

பால் + குடம் = ..............................................

8. பின்வரும் பிராணியின் **ஒலி மரபுச் சொல்லை** எழுதுக.

மயில் : ..............................................

9. பின்வரும் கவிதையில் உள்ள **வெற்றிடத்தை** நிரப்புக.

ஈசன் நாமத்தை - அனுதினம்
ஏத்திப் புகழவேண்டும்
தாச தாசனாய்ப் - பணிந்து

..............................................................

10. பின்வரும் சுருக்கக் குறியீடுகளுக்கான **விரிவினை** எழுதுக.

இ.மி.ச. : ..............................................................................................................

11. பின்வரும் **இணைமொழியைப்** பூர்த்திசெய்க.

பொருள் ..............................................

12. (i) பின்வரும் ஆங்கிலச் சொல்லிற்குரிய **தமிழ்ச் சொல்லை** எழுதுக.

stream : ..............................................

(ii) உருவில் தரப்பட்டுள்ள பறவையின் ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துகளில் எழுதுக.



: ..............................................

13. பின்வரும் ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) I am reading a ............................ (book / books)

(ii) Who ............................ (is / are) shouting ?

14. பின்வரும் வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தை **ஆங்கில எழுத்துகளில்** எழுதுக.

அமைதியாக இருக்கவும். : ..............................................................................................................

15. (i) பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

சிஷ்யயா : ..............................................

(ii) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துகளில் எழுதுக.

தேங்காய் என்ன விலை ? : ..............................................................................................................

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



● தரப்பட்டுள்ள புள்ளிக் கோடுகளில் விடைகளை எழுதுக.

**16.** தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துகளில் எழுதுக.

35 064 :.............................................................................................................

**17.** எழுத்துகளில் தரப்பட்டுள்ள எண்களை **உரோமன் இலக்கங்களில்** எழுதுக.


(i) ஆறு :.................................

(ii) பன்னிரண்டு :.................................

**18.** அடுத்து வரும் எண்களைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 6 | 16 | 9 | 24 | ...... | ...... |

**19.** பின்வரும் பின்னங்களைக் கூட்டுக. $\frac{2}{3} + \frac{1}{9} =$ ...............

**20.** 

உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாக எழுதுக

:.................................

**21.** $\frac{3}{10}$, $4\frac{2}{100}$ ஆகியவற்றை தசம எண்களாக எழுதுக.

$\frac{3}{10} =$ ............... $4\frac{2}{100} =$ ...............

**22.** ஒரு கடையில் விற்பனைக்கு இருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 892 ஆகும். முதலாம் நாள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 436 ஆகும். அவற்றில் இரண்டாம் நாள் விற்பனை செய்யப்பட்ட பின்னர் எஞ்சியிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 228 ஆகும்.

(i) முதலாம் நாள் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது ?

:.................................

(ii) இரண்டாம் நாள் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது ?

:.................................

**23.** எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் ஒரு வாகனத்திற்கு 4*l* 725*ml* பெற்றோலும் இன்னொரு வாகனத்திற்கு 6*l* 375*ml* பெற்றோலும் நிரப்பப்பட்டது. இரு வாகனங்களுக்கும் நிரப்பப்பட்ட பெற்றோலின் கனவளவு எவ்வளவு ?

:.......... *l* ............... *ml*

**24.** விலைப் பட்டியலுக்கேற்ப பின்வரும் பொருள்களை விலைக்கு வாங்குவதற்கான பணத்தைக் காண்க.

விலைப் பட்டியல்

| பொருள் | விலை | |
|---|---|---|
| | ரூபா | சதம் |
| 1kg சீனி | 90 | 00 |
| 1kg தேயிலை | 450 | 00 |
| 1kg கோதுமை மா | 110 | 00 |

(i) 2kg 500g சீனியின் விலை எவ்வளவு ? ரூபாய் :.....................


(ii) 250g தேயிலையின் விலை எவ்வளவு ? ரூபாய் :.....................

Downloaded from:-www.paritchai.com

பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**25.** 

உருவில் ஒரு நான்முகி காணப்படுகின்றது. அதன்.

(i) விளிம்புகளின் எண்ணிக்கை யாது ? :.................................


(ii) முகங்களின் எண்ணிக்கை யாது ? :.................................

**26.** தாங்கியொன்றில் நீர் நிரப்புதல் 11:45 மணித்தியாலத்திற்குத் தொடங்கியது. 3 மணித்தியாலம் 40 நிமிடங்களில் தாங்கி முற்றாக நிரம்பியது. தாங்கியில் நீர் நிரம்பி முடிந்த நேரம் யாது ?


.......... :...........மணித்தியாலம்

**27.** உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 11m ஆகும். பக்கம் PQ இன் நீளம் 2m 80cm உம் பக்கம் PR இன் நீளம் 4m 50cm உம் ஆகும். பக்கம் QR இன் நீளம் யாது ?

:.......... m ............ cm




**28.** கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரம் யாது ?




நேரம் :.........................

**29.** ஒரு பாடசாலையின் நான்கு ஆண்டுகளில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையை வகைகுறிப்பதற்கு இந்த வரைபு வரையப்பட்டுள்ளது.


(i) 2017 இல் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 75 ஆகும். அதனை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) 2015 இல் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

:......................................

(iii) 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் மொத்த எண்ணிக்கையின் $\frac{3}{4}$ பங்கினர் பெண்கள் எனின் அம்மாணவிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

:......................................




● **30 தொடக்கம் 59 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** தாவரத்தை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்கு

(1) நாய் (2) பூனை (3) பசு (4) பல்லி

**31.** ஈரப்பலாக்காயில் அதிக அளவில் அடங்கும் போசணைப் பொருள்

(1) விற்றமின்கள் (2) காபோவைதரேற்றுகள்

(3) புரதங்கள் (4) கொழுப்புகள்

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**32.** தொல்பொருள் பெறுமதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரம்

(1) சீகிரியா (2) நுவரெலியா (3) மட்டக்களப்பு (4) புத்தளம்

**33.** நீர்வெறுப்பு நோயைப் பரப்பும் பிராணிகள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

(1) நுளம்பு, ஈ, எலி, நாய் (2) நாய், பூனை, நரி, குரங்கு
(3) குரங்கு, ஈ, பூனை, நுளம்பு (4) பூனை, எலி, ஈ, நரி

**34.** உணவு உட்கொள்ளும் முன் பின்பற்ற வேண்டிய ஒரு நற்பழக்கம் **அல்லாதது**

(1) சுத்தமான நீரினால் கைகளிரண்டையும் நன்கு கழுவுதல்
(2) குவளையொன்றில் நீரை நிரப்பி தமது அருகே வைத்துக்கொள்ளல்
(3) உணவை உண்ணக்கூடிய விதத்தில் பொருத்தமான ஓர் இடத்தில் அமர்தல்
(4) உதடுகளை அளவுக்கதிகமாகத் திறக்காமல் உணவை மெல்லுதல்

**35.** காந்தத்தைக் கிட்ட கொண்டு வரும்போது **கவராத** பொருள்

(1) இரும்பு (2) பித்தளை (3) உருக்கு (4) தகரம்

**36.** நிலநடுக்கத்தின்போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) உயரமான கட்டடத்திற்குச் செல்லல்
(2) பெரிய மரத்திற்குக் கீழே இருத்தல்
(3) திறந்த வெளிக்குச் செல்லல்
(4) வீட்டிற்கு உள்ளேயே இருத்தல்

**37.** ஏர் பயன்படுத்தப்படுவது

(1) வனைதல் தொழிலில் (2) தச்சுத் தொழிலில்
(3) நெசவுத் தொழிலில் (4) கமத் தொழிலில்

**38.** தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் ஊடகம் **அல்லாதது**

(1) பத்திரிகை (2) வானொலி (3) இணையம் (4) தொலைநகல்


**39.** பூமியின் வடக்குத் திசையை அறியப் பயன்படும் உடுக்கோலம்


(1) கலப்பை (2) தென்சிலுவை (3) விருச்சிகம் (4) வேட்டைக்காரன்


**40.** இலங்கைப் பிரசையின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கு முதலில் செல்ல வேண்டியது


(1) சமாதான நீதவானிடம் (2) சமுர்த்தி முகாமையாளரிடம்
(3) பிரதேச செயலாளரிடம் (4) கிராம அலுவலரிடம்

**41.** பூரணை தினத்தில் வானில் தோன்றும் சந்திரனின் வடிவம் யாது ?


(1)


(2)


(3)


(4)

**42.** சுத்தமான நீரின் பண்பு அல்லாதது

(1) சுவையற்றது (2) மணமற்றது (3) நிறமற்றது (4) வடிவமற்றது

**43.** நாற்று மேடைகளை அமைத்து கன்றுகள் பெறப்படும் பயிர் வகை

(1) பயற்றை (2) வெண்டி (3) சோளம் (4) தக்காளி

Downloaded from:-www.paritchai.com

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**44.** நீலநிறப் பலகையில் வெள்ளைநிற முக்கோணியினுள்ளே காட்டப்பட்டுள்ள வீதிக்குறி வெளிப்படுத்தும் செய்தி யாது ?



(1) பாதசாரிகள் கடக்கும் இடம்
(2) வேகமாகப் பாதையைக் கடக்கவும்
(3) பாதசாரிகள் பாதையைக் கடக்குமிடம் முன்னால்
(4) பாதையைக் கடத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது

**45.** சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகாணங்கள் இரண்டும் எவை ?

(1) வடமத்திய, மேல்
(2) கிழக்கு, வடமேல்
(3) சப்பிரகமுவ, தென்
(4) ஊவா, வடமத்திய

**46.** கத்தரி, தக்காளி, வெண்டி போன்ற பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்துவது

(1) அழுக்கணவன் (2) பனிப்பூச்சி (3) மீலி முட்டைப்பூச்சி (4) நெல் தண்டுகோதி

**47.** இலங்கை அரச இலச்சினையில் தர்மச்சக்கரம் அடையாளப்படுத்துவது

(1) சௌபாக்கியத்தை ஆகும்.
(2) தார்மீகத்தை ஆகும்.
(3) தன்னிறைவை ஆகும்.
(4) நிலைத்திருத்தலை ஆகும்.

**48.** நீர்ப்பாத்திரங்களைக் கொடுத்து வரவேற்றல் எவ்வினத்தவரின் நீருடன் பிணைந்த திருமண சம்பிரதாயம் ?

(1) தமிழர் (2) சிங்களவர் (3) இஸ்லாமியர் (4) கத்தோலிக்கர்

**49.** இலங்கையின் மிகவும் உயரமான மலை

(1) சிவனொளிபாதம் (2) கிரிகல்பொத்தை (3) நமுனுகுலகந்த (4) பீதுருதாலகாலை

**50.** மின்காந்தம் ஒன்றில் இரும்பாணி கவரும் குண்டூசிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கத்தக்க ஒரு செயற்பாடு பின்வருவனவற்றுள் எது ?

(1) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
(2) இரும்பாணியின் நீளத்தைக் குறைத்தல்.
(3) கொயில் கம்பியின் சுற்றுக்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.
(4) உலர் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

**51.** ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு முதற்பரிசாக வழங்கப்படுவது

(1) தங்கப் பதக்கம்
(2) வெள்ளிப் பதக்கம்
(3) வெண்கலப் பதக்கம்
(4) செம்புப் பதக்கம்

**52.** பின்வரும் எந்த விளையாட்டில் பந்து கால்களினால் ஆடப்படுகின்றது ?

(1) கரப்பந்து (2) கிறிக்கெற் (3) ஹொக்கி (4) உதைபந்து

**53.** மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்டது

(1) திசாவாவி
(2) மின்னேரியா குளம்
(3) மகாகணதரா வாவி
(4) கலாவாவி

**54.** பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும்போது செய்யத்தகாத ஒரு செயல் பின்வருவனவற்றுள் எது ?

(1) தமக்குரிய சந்தர்ப்பம் வரும்வரை காத்திருத்தல்
(2) பயணஞ் செய்யும்போது தன்னடக்கம் பேணாதிருத்தல்
(3) பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதல்
(4) தேவைப்படும் சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவி புரிதல்

Downloaded from:-www.paritchai.com


[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com



**55.** சிற்றுண்டிச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும் உரு ① இலும் ② இலும் காட்டப்பட்டுள்ள பாத்திரங்களினுள் இடுவதற்குப் பொருத்தமான பொருள்கள் 2 ஐ ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) வாழைப்பழத்தோல், கடதாசி
(2) எஞ்சியுள்ள உணவு, கடதாசி
(3) கடதாசி, யோகட் கோப்பை
(4) யோகட் கோப்பை, பிளாஸ்ரிக் மூடி




**56.** வீட்டில் பூச்சாடிகளின் கீழ் வைக்கப்படும் நீர்ச்சட்டிகள் மூலம் நுளம்புகள் பெருகுவதைத் தடுப்பதற்கு நீரை மாற்றும்போது சாடியிலுள்ள நீருடன் சேர்ப்பதற்குப் பொருத்தமான பொருள் எது ?

(1) மெழுகு (2) உப்பு (3) ஓடிக்கொலோன் (4) அஸ்பிரின்

**57.** மாணவரது மனதில் வீரம், ஆளுமை, நாட்டுப்பற்று போன்றவற்றை ஏற்படுத்தும் வகையில் கற்பித்தலில் ஈடுபட்டு நாட்டைப் பொறுப்பேற்க உதவும் வகையில் பூரணமான கல்வியை வழங்கி இலங்கைக்கு சிறந்த சேவையாற்றியவர்

(1) சேர். ஆதர் சீ. கிளாக் (2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(3) கலாநிதி ரீ. பீ. ஜாயா (4) சேர் டீ. பீ. ஜயதிலக

**58.** சமூக விரோதச் செயல் பின்வருவனவற்றுள் எது ?

(1) மாலை நேர வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்லல்
(2) தொலைக்காட்சியில் செய்தி பார்த்தல்
(3) சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்
(4) பஸ் வண்டியினுள் உணவுப் பொருள்களை விற்பனை செய்தல்

**59.** "சூழலின் ஒலிகளைச் செவிமடுங்கள். தூரத்தே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். அருகே கேட்கும் ஒலிகளைச் செவிமடுங்கள். உங்களது இதயத்துடிப்பு ஒலி உங்களுக்குக் கேட்கிறதா ? அதனைச் செவிமடுங்கள்." இது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும் ?

(1) முதலாம் (2) இரண்டாம் (3) மூன்றாம் (4) ஐந்தாம்

**60.** நாம் படித்த அல்லது அறிந்த விடயங்களை நேரில் காணும்போது கிடைக்கும் மகிழ்ச்சி ஒரு புதிய அனுபவம் என்றே சொல்ல வேண்டும். வெறும் புத்தகப் படிப்பால் பயனில்லை. அனுபவம் மூலம் பெறும் கல்வியே சிறந்தது. அத்தகைய அனுபவத்தைப் பெற்றுத் தரும் 'நான் சென்ற கல்விச் சுற்றுலா' என்னும் தலைப்பில் **மூன்று** வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................
..........................................................................................

2. ..........................................................................................
..........................................................................................

3. ..........................................................................................
..........................................................................................

***

Downloaded from:-www.paritchai.com